தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**5 வயதுப்பிரிவு**
(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)

## நல்லொழுக்கம்

ஒழுக்கம் உயிரை விட மேலானது. எங்கள் வாழ்வு சிறக்க நல்லொழுக்கம் துணையாகும். வீட்டில் பெற்றோர்களும், பள்ளிகளில் ஆசிரியர்களும் எமக்கு நல்லொழுக்கங்களைச் சொல்லித் தருகிறார்கள்.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்பார்கள். ஆகவே, குழந்தைப் பருவம் முதலே அவற்றைப் பின்பற்றி வாழப் பழக வேண்டும். பெற்றோரையும், குருவையும் மதிப்போம். இனிமையான சொற்களைப் பேசுவோம்.

எல்லா உயிர்கள் மீதும் அன்பு செய்வோம். நன்றி மறவாது வாழ்வோம். நேர்மை மிக்கவர்களாக இருப்போம். அறத்தின் வழி நடப்போம். பொய், பொறாமை, களவு போன்ற தீய பழக்கங்களைச் செய்யாதிருப்போம்.

ஒழுக்கத்தின் நெறி நின்று வாழ்ந்து காட்டுபவர் எங்கள் தலைவர் மாமா. அவர் காட்டிய வழியில் இறுதிவரை நின்றவர்கள் எங்கள் மாவீரர்கள். வாழ்கின்ற போதும், வாழ்வு முடிந்த பின்னும் நிலையான புகழைப் பெற்றுத்தரும் வல்லமை பெற்றது நல்லொழுக்கம். அதற்கு அவர்களே எமக்கு எடுத்துக்காட்டாக உள்ளார்கள். நாமும் நல்லொழுக்கம் உள்ள பிள்ளைகளாக வளர்வோம்.

நன்றி,

வணக்கம்.